**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.76/2022**

**வா.சா.– 1– பழனிச்சாமி , த/பெ.செல்லப்பகவுண்டர்**

**நாள். 23.02.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வா.சா.ஆ.4. ல் கண்டுள்ள பட்டா எண்.4125 ஆனது 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4. ல் கண்டுள்ள பட்டா எண். 987 ஆனது 2 ம் பிரதிவாதி பெயரிலும், முத்துச்சாமி பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். முத்துச்சாமி இவ்வழக்கின் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள பட்டா எண்.4147 முத்துச்சாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு மேற்கூறிய பட்டா 4147 சம்மந்தமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் கண்டுள்ள பட்டா எண். 576 ஆனது 1 ம் பிரதிவாதி பெயரிலும், முத்துச்சாமி யெரிலும் உள்ளது என்றால் சரிதான். அதில் கண்டுள்ள 3 ஏர்ஸ் சொத்து என்ன சொத்து என என்னால் அடையாளம் காட்ட முடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள பட்டா எண். 232 ஆனது பக்கத்து தோட்டத்துக்காரர்களுடையது என்றால் சரிதான். ஆகவே இந்த வழக்கிற்கு இந்த பட்டா 232 சம்மந்தமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ல் கண்டுள்ள பட்டா எண். 987 ல் கட்டுப்பட்ட 9 1/2 ஏர்ஸ், 2 1/2 ஏர்ஸ் மற்றும் 6 1/2 ஏர்ஸ் ல் கண்டுள்ள சொத்துக்களில் என்ன உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.6 வரையான ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களைத்தான் வா.சா.ஆ.2 வாயிலாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். ஆகவே 1,2 பிரதிவாதிகளும் 1 வது பிரதிவாதியின் சகோதரர் ராசப்பனும் அவரது மகன் முத்துச்சாமியும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். தாவாவில், தாவாச் சொத்துக்களில் என்னென்ன உள்ளது என்றும் அதற்குரிய நான்குமால் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். தாவாவில் 13 வது அயிட்ட சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு 3 1/2 செண்ட்தா உரிமையுள்ள பட்சத்தில் தாவா செண்ட்ல் 7 செண்ட் பாகம் கேட்பது சரியல்ல என்றால் உரிமையுள்ளது. வாசா.2, ஆவணமானது 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் அசலாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாவில் 13 வது அயிட்ட

சொத்து குறித்து பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் 7 செண்ட்ல் தென்புறம் 3 1/2 செண்ட் என காட்டியுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ. 6 வரையுள்ள ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து 1,2 பிரதிவாதிகளும் , 1ம்பிரதிவாதியின் சகோதரர் முத்துச்சாமியும், பி.வா.சா.ஆ.7ன் படி பாகம் பிரித்துக் கொண்டதால் வாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் வாதியோ, 3ம்பிரதிவாதியோ பாகம் கேட்டு 1, 2 பிரதிவாதிகளிடம் பாகம் கோரியது இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ. 6 வரையுள்ள கிரையப்பத்திரங்களில் உள்ள சொத்துக்களை பொறுத்து பி.வா.சா.ஆ.7 மூலமாக பாகம் பிரித்துக் கொண்டதில் 1ம் பிரதிவாதிக்கு உள்ள பாகத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3.ஆவணத்தின் படி கிரையம் செய்து கொடுத்துள்ளதைப் பொறுத்து நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய 1ம் பிரதிவாதி உயிரோடு இருக்கும் போது அவரின் மக்கள் யாரும் பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்களைப் பொறுத்து தன்னிச்சையாக 3ம் நபர்களுக்கு கிரையம் செய்ய உரிமையுள்ளது என்றும் அது குறித்து அவரது மக்கள் கேள்வி எழுப்ப எவ்வித அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு 1,2 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.23 19:03:24 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.